உ
ஸ்ரீசிவமயம்

Registered as a News-
Paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரணஹு புரட்டாதிமீ ௯ௗ (1944 செப்டம்பர்மீ 25 திங்கட்கிழமை) [இல ௬௭

# பிரிட்டிஷ் முன்னேற்றத்தைத் தடுக்க ஜெர்மன் எதிர்ப்பு

## ஸீஜ்பிரிட் அரணைத் தகர்க்க அமெரிக்கர்சமர்

### ஜெர்மன் தளங்கள்மீது கடுமையான வெடிகுண்டுவீச்சு

ஜெர்மனியின் வடமேற்கு வாசலைநோக்கி றைன்நதி நெடுக முன்னேறிக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் துருப்புகளைக் கடுத்து நிறுத்துவதற்காக ஜெர்மானியர் மகா மூர்க்கமாக யுத்தஞ் செய்து கொண்டிருக்கிறார்கள். அதே சமயத்தில் அமெரிக்க முதலாவது, மூன்றாவது சைனியங்கள் ஸீஜ்பிரிட் அரணுக்கு எதிராகவும், மோஸெல் நதியின் குறுக்காகவும் மேலும் ஏராளமான படைகளை ஏவிவிட்டு ஜெர்மன் இடதுபுறத்தில் மோசமான நிலைமையை யுண்டாக்கியுள்ளனர்.

லண்டன், செப் 22

ஆச்சனில் நெருப்புப் பற்றி எரிவதாக ஜெர்மானியர் அறிவித்தனர். ஆகனின் நாற்புறத்திலும் இப்போது உக்கிரமான சமர் நடந்து கொண்டிருக்கிறது.

வடக்கே 12 மைல் தூரத்தில் முதலாவது டாங்கிப்படை ரீச் ஸ்வல்லைப்புறத்தைக் கடந்து கிலென்கர்ச்சன் நகரை நெருங்கிக்கொண்டிருக்கின்றன.

ஸ்டோல்பர்க்கில் தெருச்சண்டை நடந்துகொண்டிருக்கிறது. நேசத் துருப்புகள் ஸீஜ்பிரிட் அரண் ஊடாக படிப்படியாகமுன்னேறிக்கொண்டிருக்கையில் நேசதேசப் பீரங்கிகள் ஸ்டோலபர்க் நகருக்கு அப்பாலுள்ள ஜெர்மன் தளங்களை இடைவிடாது குண்டுவீசித் தாக்கி வருகின்றன.

ஆச்சனுக்குத் தென்கிழக்கிலுள்ள அமெரிக்க கவசப்படை டிரியருக்கு வடக்கிலும் கடுமையாகத்தாக்கிக்கொண்டிருக்கிறது. மத்திய அரங்கம்நெடுக நேசதேச விமானப் படை ஜெர்மன் ரயிலவேக்களையும் துருப்பு நடமாட்டங்களையும் உக்கிரமாக வெடிகுண்டு எறிந்து தாக்கி வருகிறது.

ஜெனரல் டெம்ப்ஸேயின் டாங்கிகள், ஆர்ன்ஹெமிலுள்ள விமானச் சேனைத் துருப்புகளுக்கு உதவியளிப்பதற்காக நேற்றிரவு ஜெர்மன் படை வரிசைகளை ஊடுருவிக்கொண்டு முன்னேறின. நான்கு நாட்களாகக் கடுமையான தாக்குதல்களையும் சமாளித்துக்கொண்டு போரிட்டு வரும் பிரஸ்தாப விமானச் சேனைகளுக்கு எந்த நிமிஷத்திலும் உதவி போய்ச் சேரக்கூடிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது. உதவித் துருப்புகள் ஆர்ன்ஹெம் நகருக்கு கண்ணுக்கெட்டும தூரத்தில் வந்துவிட்டன.

அமெரிக்க கவசப்படைச் சைனியங்கள் நேற்று லுனவில்லேயை மீண்டும் கைப்பற்றின. இப்போது ஜெர்மானியரை வடக்கில் பின்தள்ளி வருகின்றன. இங்கு நடந்த சண்டையில் ஜெர்மானியர் 150 டாங்கிகளை இழந்தனர்.

ஹாலந்துமேல் அமெரிக்க விமானங்கள் 20 ஜெர்மன் விமானங்களை சுட்டுவீழ்த்தின. நான்கு அமெரிக்க விமானங்கள் காணப்படவில்லை.

போலோன நகரின் எற்றுப்பகுதியில் ஜெர்மானியர் எதிர்ப்பு இருந்து வரும் கடைசி இடம், இன்றுகாலை ஆர் எனப் விமானங்களால் வெடிகுண்டு எறிந்து தாக்கப்பட்டது. நமது நேசதேச விமானங்களுக்கு எதிராக ஒரு பீரங்கிக் குண்டுகூடப் பிரயோகிக்கப்படவில்லை. இதிலிருந்து அங்கு ஜெர்மானியர் எவ்வளவு தூரம் சங்கடமான நிலைமையில் இருக்கிறார்களென்பது நன்கு வெளிப்படுகிறது.

### 3-வது வகுப்பிலுள்ள கிளார்க்குகளின் சங்கடமான நிலைமை

மூன்றாவது வகுப்புக் கிளார்க்குகள் விஷயமாக மேலும் அனேக அரசாங்கப் பகுதித் தலைவர்கள் பிரதம காரியதரிசிக்கு அல்லது பதில் பிரதம காரியதரிசிக்குக் கடிதமெழுதி இருக்கின்றனரென்று அறியப்படுகிறது.

தற்காலிக ஆடிட்டர் ஜெனரல் தாம் சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பத்தில் பிரஸ்தாப வகுப்புக் கிளார்க்குகள் செய்யும் திறமான வேலைக்குத் தமது கந்தோர் உதாரணமாக விளங்குகின்றதென்று கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது:-

"நான் ஜெனரல் கிளறிக்கல் சர்வீஸ் அங்கத்தவராக சுமார் 15 ஆண்டுகள் சேவை செய்திருக்கிறேன். தற்சமயம் இந்த வேலையில் சேர்ந்திருப்பவர்கள் எனது காலத்தில் சேர்ந்தவர்களைவிட அதிககல்வியறிவுள்ளவர்களென்று நான் திட்டமாகக் கூறமுடியும். இந்த வேலையில சர்வகலாசாலைக் கல்விகற்ற இளைஞர்கள் பலர் இருக்கின்றனர். அவர்கள் மிகவும் திறமையாகக் காரியங்கள் செய்யக்கூடியவர்கள்.

அவர்கள் தாம் இந்த சர்வீஸில் சேர்ந்தால் ஒருநியாயமான கால அளவுக்குள் தமக்கு ஏதாவது நன்மை உண்டாகும் என்ற நம்பிக்கையுடன் இதில நுழைந்தார்கள். ஆனால் தமக்குக் கிடைக்கும் சம்பளம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கே போதாமலிருப்பதைக் கண்டதும் அவர்களுக்குக் கவலையும் அதிருப்தியும் ஏற்பட்டு அவர்களின் திறமை மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டது.'

முன்புபோல கிளறிக்கல் சர்வீஸின் 2-வது வகுப்புக் கிளார்க்குகளை நேரடியாக சேவைக்கு எடுக்க வேண்டுமென்றும் 2-வது வகுப்பிலுள்ள பதவிகளை அதிகரிக்கவேண்டுமென்றும் 3-வது வகுப்புக் கிளார்க்குகள் மூன்றுவருட சேவைக்குப் பின்னர் 2-வது வகுப்பில் நுழைவதற்குப் போட்டியிட அநுமதிக்கப்படவேண்டுமென்றும் தற்காலிக ஓடிற்றர் ஜெனறல் ஆலோசனை கூறுகிறார்.

சட்டம் தயாரிப்பவர் சமர்ப்பித்திருக்கும் மகஜர் ஒன்றில் சம்பளவிகிதத்தை அதிகரிப்பதன்மூலம் இப்பிரச்னை முற்றாக தீர்ப்பது சமீப எதிர்காலத்தில் முடியாதகாரியமாயிருந்தால் இந்த அதிகாரிகள் அவர்கள் செய்யும் வேலைக்கேற்ற சம்பளம் பெறுவதற்கேதுவாக அவர்களுக்குக் கூடிய விரைவில் பதவி உயர்வு வழங்குவதையாவது மேற்கொள்ளவேண்டுமென்று புலம்பத் தெரிவிக்கின்றார்.

### சைனியங்களைக் கலைத்துவிட அரசினர் யோசனை

லண்டன் செப் 22—

ஐரோப்பிய யுத்தத்தின் முடிவுக்கும் ஜப்பான் தோற்கடிக்கப்படுவதற்கும் இடையேயுள்ள காலத்தில் படைகளைக் கலைத்துவிடுவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் போட்டிருக்கும் திட்டத்தை பிரபல பிரிட்டிஷ் பத்திரிகைகள் எல்லாம் இன்று வரவேற்கின்றன. பொதுவிவாதம் சிறு கஷ்டங்களை அல்லது ஆட்சேபனைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வருமெனினும் திட்டம் நியாயமானது என்பதும் அது நன்கு வகுக்கப்பட்டிருக்கிறது என்பதும்மே ஏகோபித்த அபிப்பிராயமாயிருக்கிறது.

பிரஸ்தாப திட்டத்தின் கொள்கைகளை எல்லா இடங்களிலும் சமவேகத்துடன் அநுஷ்டிப்பது அரசினருக்குக் கஷ்டமாகலாமென்று 'டைம்ஸ்' பத்திரிகை எச்சரிக்கை செய்கிறது, ஜப்பானியப்போரின் தேவைகளும் ஐரோப்பாவிலுள்ள சத்துரு நாடுகளில படைகளை வைத்திருக்கவேண்டிய அவசியமும் சிலருக்குக் கஷ்டங்களை உண்டுபண்ணலாம்,

### தவறுதல்கள் கற்பித்த பாடம்

கடாத மகா யுத்தத்துக்குப்பின்னர் செய்த தவறுதல்களைக்கொண்டு அரசினர் நல்லபாடம் படித்திருக்கின்றனரென்றும் கட்டுப்பாடற்ற முறையில் படைகளைக் கலைத்துவிடுவதால் ஏற்படக்கூடிய தீமைகளைத் தவிர்க்க அவர்கள் உறுதிகொண்டிருக்கின்றனரென்றும் பொதுவாகக் கருதப்படுகிறது.

சமாதான கால உற்பத்தி சமூகமாக நடைபெறச் செய்வதற்கு யுத்தத்துக்குப் பின்னரும் கொஞ்சக் காலத்துக்கு அரசினர் ஆட்பலத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருக்க வேண்டியிருக்குமென்பதையும் பத்திரிகைகள் ஏற்றுக்கொள்கின்றன.

### மகாத்மா—ஜின்னா சம்பாஷணை

#### அடுத்த மாசமும் நடைபெறும்

பம்பாய் செப் 21—

காந்தி-ஜின்னா பேச்சுவார்த்தைகள் எல்லோரும் எதிர்பார்த்தபடி அவ்வளவு சீக்கிரத்தில் முடியாமல் வெகுநாள் நீடிக்கும்போல் தோன்றுகிறது.

இந்தவாரத்தின் மத்தியில் காந்தி ஜின்னா பேச்சுகள் முடியுமென கடந்தவாரத்தில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவை செப்டெம்பர் மாதத்தில் மட்டுமன்றி அதற்கு மேலும் நடைபெறுமென்பதற்கு இப்பொழுது அறிகுறிகளிருக்கின்றன.

சேவா கிராமத்தில் அக்டோபர் மீ 2ந் தேதி நடைபெறவிருக்கும் கஸ்தூரிபாய் ஞாபகார்த்தக் கமிட்டிக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, தாம வார்தாவுக்குச் செல்வதற்கு வசதியளிப்பதற்கு, தங்கள் பேச்சுவார்த்தைகளை கொஞ்சம ஒத்தி வைக்கும்படி மகாத்மா காந்தி கேட்கலாமெனவும் தெரிகிறது. அவர்களுடைய பேச்சுக்களில முக்கியமான பிரச்னை பொதுஜன வாக்கெடுப்பைப் பற்றியதாக இருக்குமெனத் தெரிகிறது. பாகிஸ்தானைப் பற்றித் தீர்மானிப்பதற்கு முன்னதாகப் பொதுஜன வாக்கெடுப்பு அவசியமென்று ராஜாஜிதிட்டம் கூறுகிறது. பொதுஜனவாக்கெடுப்பு இல்லாமலே, முஸ்லீம்கள் பாகிஸ்தான உரிமையைப் பெறவேண்டுமென்று ஜின்னா வற்புறுத்துவதாகவும் தெரிகிறது. பேச்சுக்கள் சுமூகமாக நடக்கின்றன. மகாத்மா காந்தி இருதினங்களுக்கு முன் கூறியதுபோல் இருதலைவர்களும சமரசமேற்படுமென்றே நம்பியிருக்கிறார்கள்.

காந்தி-ஜின்னா சந்திப்பு இன்று நூறு நிமிஷங்களுக்குமேல் நீடித்தது, அவர்கள சந்திப்பிற்காக தீர்மானிக்கப்பட்ட நேரத்திற்கு ஐந்து நிமிஷங்களுக்கு முன்னதாக மகாத்மா காந்தி ஜின்னாவின வாஸஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார். அவர்கள சந்திப்பு முடிந்ததின் தங்களிருவரும நாளை மாலை 5-30 மணிக்குத் திரும்பவும சந்திக்கப் போவதாக ஜின்னா தெரிவித்தார்.

### ஸ்ரீலஸ்ரீ செவ்வந்திநாத தேசிகர் அவர்கள் குருபூஜை

ஆவணி மாதம 29-ந் திகதி (13-9-44) புதன்கிழமை வேலணை மேற்கிலுள்ள குருக்கள் மடத்தில தேசிகர் அவர்களின் குருபூஜை அவர்தம் அடியார்களால் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பகல் 1½ மணிக்கு தேசிகர்பூசை ஸ்ரீலஸ்ரீ சுந்தர சர்மசிகா சிவபூஜா துரந்தர் அவர்கள தலைமையில நடத்தப்பட்டது. பின இரண்டு மணியளவில் சிவபூஜா துரந்தரர், சைவ மாணவர், சைவ அடியார்கள உட்பட பலருடைய கணக்காளருக்கு மாகேசுரபூஜை நடத்தப்பட்டது.

—அடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரண ஞு
புரட்டாசிமீ ௧௦௨ திங்கட்கிழமை


## ஐக்கியசங்கக் கடைகள்

யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் ஐக்கியசங்கக் கடைகள் தொடங்கப்பட்டகாலத்தில், ஆங்காங்குள்ள மக்கள் மிகவும் நல்ல நோக்கத்தோடும் பொருட்சிக்கனத்தை யுத்தேசித்துமே மேற்படிசங்கக் கடைகளைத் தொடங்கினார்களென எவரும் எண்ணத்தக்கதாக விருந்தது; ஐக்கிய சங்கங்களால வரக்கூடிய நன்மைகளையும் பிரமாணங்களையும் பாமர சனங்களுக்கு ஆரம்பகாலத்திலே விளக்கி ஐக்கியமுறையைக் கைக்கொள்ளச் செய்தல் சிறிது கஷ்டமாகவிருந்ததெனினும், காலகதியில் சனங்கள் அவைகளை யுள்ளபடி உணர்ந்து ஐக்கியசங்கக் கடைகளை ஆதரித்து வந்தார்கள். இந்த யுத்தகாலத்தில் மாத்திரமல்ல, யுத்தமுடிந்து சமாதானம் வருங்காலத்திலும், ஊரவர் வைத்து நடத்தும் கடைகளைக்காட்டிலும் இந்த ஐக்கியசங்கக் கடைகளாலேயே சனங்களுக்கு நன்மைவருதல் கூடுமென ஐக்கியசங்கப்பகுதி மேலதிகாரிகளும் சனங்களும் எண்ணியிருந்தார்கள்.

ஆனால் காலஞ் செல்லச் செல்ல, ஐக்கியசங்கக் கடைகள் சிலவற்றிற்கு மாறாக முறையீடுகள் உண்டாயின; பண்டங் கொள்ளும்படி போவோர் மணித்தியாலக்கணக்கில் தாமதித்து நிற்றல் வேண்டுமென்ற முறையீடு ஐக்கியசங்கத்திலுள்ள அங்கத்தவர்கள் விஷயத்தில் முகமனை பார்த்துப் பட்சபாதமாகப் பண்டங்கள் பகாந்து கொடுக்கப்படுகின்றன வென்ற முறையீடு, கூப்பன் கட்டுப்பாட்டுக்கு வெளியேயுள்ள பொருள்களுள் அரிசி, பருப்பு, கோதுமைமா, சீனி முதலிய சில பொருள்கள் மாத்திரம் கூப்பன்களுக்குக் கொடுக்கப்படுகின்றனவெனினும் சில பொருள்கள் கொடுக்கப்படுவதில்லையென்பது போன்ற பல முறையீடுகள் பிறக்கலாயின. மேலும், கடைகளில் நிறைபோ பண்டங் கொள்ளும்படி ஆங்கு வருமவர்களுடைய வேலைசார் ... இல்லாத ... ஆனால் ... வுடைய ... [illegible] ... சில ஐக்கியசங்கக் கடைகளில் ... ஊர் ... [illegible]

விலகியதும் சங்க அதிகாரிகளால் விலக்கப்பட்டதுமுண்டு; சில சங்கக்கடைகளில் ஏதுமொரு காரணம்பற்றி அனுபவமற்ற வாலிபரை 'மனேஜ'ராக நியமித்துவிட, அதனால் அவ்வாலிபரும் அவர்கள் கூடத்துக் கடையும் அக்கடையிற் கொள்வனவு செய்யும் பங்காளரும் மற்றுறைச்சாரும் ஆடாப்படுவதுமுண்டு; இவைமாத்திரமல்லாமல், சங்கக்கடைகளை நடத்தும் நிர்வாகசபை அங்கத்தவர் கட்டுக்கைபெய பிணக்கும மனஸ்தாபமும் உண்டாயிட்டு அதனால் அவ்வங்கத்தவர்கள் தங்கள் பொறுப்பை யுணராது ... செய்வதுமுண்டு; ... சங்கக் கடைகளிற் ... [illegible] ... ஐக்கியசங்கக்கடைகளிற் ... [illegible] ... முறையீடுகளிற் சில மெய்யாகவும் சில மெய்யல்லனவாகவும் இருக்தல் கூடும்: ஆனால் சங்கக்கடைகளைப் பற்றிக் குறைவான அபிப்பிராயம் சனங்களுக்கிடையே இப்பொழுது எழுந்துவிட்டது. இவை மாத்திரமல்லாமல் வேறு மாகாணத்திலுள்ள இரண்டுமூன்று சங்கக்கடைகள் முறையாகப் பரிபாலிக்கப்படாமையினால், அக்கடைகளின் பரிபாலனப் பொறுப்பை மேலதிகாரிகள் தாமே நேரில் வகித்து நடத்தலாயினரெனவுந் அறியக்கிடக்கின்றது.

இப்பொழுது சிலகாலமாக புடைவை துணிகளும் ஐக்கிய சங்கக்கடைகள் மூலம் உதவப்படலாயின; கட்டுப்பாட்டதிகாரிகள் சங்கக்கடைகளிற் சேர்ந்துள்ள பங்காளிகளின் உபயோகத்திற்குப்போதிய புடைவை துணிகளை மேற்படி கடைகளுக்கு உதவமுடியாமலிருக்கின்றனரென்பது நிசம். ஆனால் கொடுக்கப்படும் அற்பத்தொகையான துணிகளைத்தானும் பகிர்ந்து கொடுக்கும் விஷயத்தில் சங்கக்கடைக்காரர் பங்காளரிடத்திற் குறை கேட்கின்றனர்; காரணம் சங்கக்கடைக்காரருக்கும் பங்காளருக்குமிடையே யுள்ள விபரீத விளக்கமேயெனலாம். சங்கக்கடைகளின் நிர்வாக சபையார் பங்காளிகளுக்குப் பொருட்கட்டுப்பாட்டின நிலைமையையும் தங்கள் கஷ்டங்களையும் உள்ளபடி தெருட்டிவிட்டால் பரஸ்பரம் மனஸ்தாபம் எழுமாட்டாதென நினைக்கின்றோம்.

ஊரவர்களுக்குச் சங்கக்கடைகளினிடத்து காரணமற்ற மேயா ஐயமும் ... உடைமையைப் பிறந்துவிட்டது; யுத்தம் முடிந்து ... [illegible]

லாம் தொன்மை நிலையையடையுங்காலத்திலே இச்சங்கக்கடைகள் சில ஊரங்கட்குத்தானும் நிர்வகிக்கும் நிற்குமோ என்பது சந்தேகத்திற்கிடமாகும்; கட்டுப்பாட்டதிகாரிகள் இலங்கையிலுள்ள சங்கக்கடைகளின் வரவு செலவுக் கணக்கையும் இருப்புக் கிட்டத்தையும் அண்ணபிறவற்றையும் உள்ளபடி யுணரவேண்டி, வருகிற அக்டோபர்மாசம் முதலாம் திகதி தொடக்கம் நாலாந்திகதி முடியச் சகல சங்கக்கடைகளிலும் கொள்ளல் விற்றல் நடவாவென விளம்பரஞ் செய்திருக்கிறார்கள்; அதன்பின்பே சங்கக்கடைகளின் உண்மை நிலையை அறியலாகும்.

## பஸிபிக்கில் 29 ஜப்பானிய கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன

டோக்கியோ செப் 19—

இன்று டோக்கியோ ரேடியோ வமர்சகர் பின்வருமாறு கூறினர்:- "பிலிப்பைன்ஸ் பாதுகாப்பு நாள் சமீபத்துவிட்டது. தற்கால நிலைமை நெருக்கடியானதாக இருக்கிறது. ஆனால் ஜனங்களும் பிலிப்பைன்ஸ் அரசாங்கமும் இந்த அபாயத்தை உணர்ந்து உஷாராக இருக்கிறார்கள். எல்லாப் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன. பிலிப்பைன்ஸிலுள்ள ஜப்பானிய விமானப்படை போருக்குத் தயாராகவிருக்கிறது. இந்தீவுகளிலுள்ள ஜப்பானிய மக்கள் பூரணமாக ஆயுதபாணிகளாக்கப்பட்டனர். அவர்கள் எந்நிலைமையிலும் அதனைச் சமாளிக்கத் தயாராக இருக்கிறார்கள்" ஜப்பானியப் பத்திரிகையான மெய்னிசி பின்வருமாறு எழுதியிருப்பதாக ஜப்பானிய நியூஸ் ஏஜன்ஸி தெரிவித்தது: வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக்கூடிய போர் தூரிதமாக நெருங்கி வருகிறது. விரோதிகள் பலாதீவுகளுக்கும் மொலுக்கஸ் தீவுகளுக்கும் தங்கள் படைகளை அனுப்பி நுகக்கின்றனர். அவர்களுடைய உத்தேச திட்டத்தின் பூர்வாங்கமாக இப்படைகள் மேற்கண்ட தீவுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

## யூகோப்படைகள் பெல்கிரேடை அணுகுகின்றன

லண்டன் செப் 22—

யூகோஸ்லேவியா தேசாபிமானப் படைகள் அத்தேசத்தின் தலைநகரமாகிய பெல்கிரேடை அணுகும் ஸ்தானத்துக்கு வந்துவிட்டன என்று மார்ஷல் டிட்டோவின் தலைமைக் காரியாலய அறிக்கை கூறுகிறது. அவைகள் லாஸரோ நகரைப் பிடித்துவிட்டனவென்று அவ்வறிக்கை மேலும் கூறுகிறது.

## பொதுஜன பாதுகாப்பு அதிகாரி அவுஸ்திரேலியாவுக்குப் பிரயாணம

இலங்கையின் உணவு சம்பந்தமான சில பிரதான காரியங்களை யிட்டு ஒழுங்குகள் செய்வதற்காக ஸா. ஒலிவர் குணதிலக்க அவுஸ்திரேலியாவுக்கு மிகவும் சீக்கிரத்தில் செல்வார். அவர் அங்கு தங்கும் காலத்தைப் பற்றி இன்னும் ... தமக்கு ... அறியக்கிடக்கின்றது.

## இலங்கையில் வைத்திய ஆராய்ச்சி

வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனமொன்றை அங்குரார்ப்பணஞ்செய்வதற்கான திட்டமொன்று கூடிய விரைவில் சுகாதாரநிர்வாகக் கமிட்டியின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்படுமென்று அறியப்படுகிறது.

சுகாதாரமந்திரி இத்திட்டத்தை வகுக்கையில் சர்வகலாசாலையின் உப அத்தியட்சகருடனும், வைத்திய கலாபீடத்தின் தலைவருடனும் கலந்தாலோசித்தாரென்றும், இத்திட்டத்தை நடத்துவதில் பூரணமாக ஒத்துழைக்க அவர்கள் வாக்குறுதி யளித்திருப்பதாயும் அறியப்படுகிறது. இப்பொழுது ஆலோசனையிலிருந்துவரும் திட்டத்துக்கும் கிருமி ஆராய்ச்சி ஸ்தாபனம் அமைப்பது சம்பந்தமாகக் கூறப்பட்ட ஆலோசனைகளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை.

### முழுநேரமும் ஆராய்ச்சி வேலை

மூன்று டாக்டர்களை அமர்த்தி ஆராய்ச்சி வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்த அனுமதிக்கப்படமாட்டார்கள். இவர்களின் முழுநேரமும் ஆராய்ச்சி வேலையிலேயே செலவிடப்படும்.

இந்த டாக்டர்களில் இருவர் கலாசாலை டாக்டர் பட்டம் பெற்ற கோஷ்டியினரிலிருந்து எடுக்கப்படுவர். தமது பாடங்களில் அதிக புள்ளிபெற்ற ஆராய்ச்சி வேலையில் ஆர்வமுள்ளவர்களாயிருக்கும் இருவர் தெரிவுசெய்யப்படுவர்.

இத் திட்டத்தின்கீழ் நியமனம் செய்வதற்கு தெரிவு செய்யப்படும் மூன்றாவது டாக்டர் வைத்தியத்திலும் சத்திர சிகிச்சையிலும் முதன்மையாகத் தேறி இப்பொழுது இங்கிலாந்தில் விசேஷ பயிற்சிபெற்று வரும் ஒருவராவர்.

புதிய ஸ்தாபனம் நடத்தும் ஆராய்ச்சிவேலையைப் பரிசோதனை செய்வதற்கு பின்னர் ஒரு விசேஷக் கமிட்டியை நியமிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இக்கமிட்டியில் சர்வகலாசாலை உபஅத்தியக்ஷகர் வைத்திய கலாபீடத் தலைவர் வைத்திய சுகாதார சர்வீஸ் டைரக்டர் ஆகியோரும் பிறரும் அங்கத்தவர்களாயிருப்பர்.

### 'மேபா' சமவெளியில் 8-வது படை

லண்டன் செப 23—

ரிமினியைப் பிடித்த எட்டாவது படையைச் சேர்ந்த டாங்கிகள் 'போ' நதிவரையிலுமுள்ள சமவெளியில் முன்னேறிப் போய்க்கொண்டிருக்கின்றன.

என்று மத்தியதரைக் கடல் பிரதேச நேசதேச தலைமைக் காரியாலய அறிக்கை கூறுகிறது. மேலும் அது கூறுவதாவது:- இத்தாலிய தளங்களில் வைக்கப்பட்டிருக்கும் நேச விமானங்களில் 500-க்கு மேல் 700 வரையுமுள்ள கனரகவெடிகுண்டு விமானங்கள் மூனிச்சிலும் லாரிஸ்ஸாவிலும் தாக்குதல் நடத்தின. ஜேர்மனியர் எதிர்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநீற்றின் பெருமை

(V. A. மூர்த்தி)

கிடைத்தற்கரிய மானிடப்பிறவியைப்பெற்றும், மிகமேலாகிய சைவ சமய மரபிலே பிறந்தும், அநேக மக்கள் திருநீற்றின் பெருமையை உணராமல் இருக்கின்றனர். அதை அணிவதால் ஒரு பயனுமில்லையென்பதே அவர்கள் கொண்ட கருத்து. ஆதலாலே இதைத் தாங்களும் அணியாமல், அன்புடன் அணிபவர்களையும் ஏளனஞ் செய்கின்றனர். இவர்களது அறியாமை தானென்னே! "பூசணி பணிபவர்க்கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு", 'முத்தி தருவது நீறு' என்ற அடியாரது வாக்கை மறந்துவிட்டனரோ! ஒருவனுக்குத் திருநீற்றிலும் மேலான செல்வமும் பேறும் இல்லை என்பதை அறிகிலர்போலும். திருநீற்றின் மகிமையை நன்கு அறிந்தால் யாராவது இதை அன்புடன் பூசாது விடுவாரா?

திருநீறு என்பது விபூதி. பஸ்மம், இரக்ஷை, நீறு, விபூதி, சாரம், பசிதம், கவசம் அல்லது காப்பு என்பன இத்திருநீற்றின் மறுநாமங்கள். ஒவ்வொரு காரணத்தைக் கொண்டே இதற்கு ஒவ்வொரு பெயரும் வந்தது. சகல பாவங்களையும் நீற்றலால், நீறு எனப் பெயர்பெற்றது. 'திருநீறு' என்னும் மொழிக்கண்ணுள்ள திரு என்பது 'திருக்கோயில்', 'திருக்குளம்' என்றும் போல்வதோர் தருவருட்சத்து பதிதலைக் குறிப்பாலுணர்த்தும் ஓர் மொழியாம். ஆகவே திருநீறு என்பது திருவருட்தன்மை வாய்ந்த நீறு என்று பொருள்படும். மேலான ஐசுவரியத்தைக் கொடுத்தலால் விபூதியென்றும், உயிர்களின் மலத்தைப் போக்குவதால் ஸாரமென்றும், அறியாமையாகிய இருளை நீக்குவதால் பஸிதம் என்றும், பூதாதிகளைப் போக்கிக் காத்தலால் காப்பு அல்லது இரக்ஷை என்றும், சததிங்பாதத்துக்குக் காரணமாய் பழவினைகளை அழித்தலால் பஸ்மம் என்றும் இத்திருநீறு பலபெயர் பெறும்.

திருநீற்றிலே திருவருள் அதிகமாக விளங்குவதுபற்றி, மிக உயர்ந்த உண்மைகளும் விளங்குகின்றன. பசுமலமானது நெருப்பில் இடப்பட்டுச் சுத்தமான திருநீறு ஆகின்றது. இதேபோல, ஆன்மாக்களில் உள்ள மலங்கள் சிவபெருமானது ஞானத்தினால் சுடப்பட்ட ஆன்மாக்களுக்குச் சிவத்தன்மை உண்டாகிறது. இந்த உண்மையையே திருநீறு குறிக்கின்றது. இதனாலே திருநீற்றைக் காணும்போது, எங்களைப் பிடித்திருக்கும் மலத்தைப்பற்றிய எண்ணமும் அதை நீக்குதற்கு நம்மைக் கடவுளிடம் ஒப்புவிப்பதே வழியென்று உணர்ச்சியும், கடவுளை வழிபடுதற்குவேண்டிய அன்பும் மனக்கசிவும் உண்டாக்கத்தக்கன. இவைகளே எங்களை நல்வழியிற் செலுத்தும் எண்ணங்களும் செய்கைகளுமாம். ஆகவே மக்கட் பிறப்படுத்த எங்களுக்குத் திருநீற்றிலும் மேலான செல்வமும் பேறும் இல்லையென்பதைக் கூறவேண்டியதில்லை. சிவாலய தரிசனம் நித்தியம் செய்யவோ அல்லது சிவனடியாரைச் சேவிக்கவோ எல்லாராலும் எக்காலத்தும் செய்யக்கூடியதொன்றல்ல. ஆனால் எவர்களுக்கும் எக்காலமும் இலகுவிற் கிடைக்கத்தக்கது திருநீறு. ஆதலின் கடவுளை அடைதற்குப் பெருந்துணையாயுள்ளது திருநீறே.

இத்திருநீற்றை மெய்யன்போடு அணிவதால் அது ஆன்மாவை மெல்லமெல்ல ஆணவத்தினின்றும் நீக்கி, தீவினையில் மனத்தை விடாமல் தடுத்து நல்வினையைச் செய்விக்கும். காலகதியில் சிவபுண்ணியங்களைச் செய்வித்து அதன்பயனாக ஞானத்தைப்பெறச்செய்து பழவினைகள் யாவற்றையும் தொலைப்பிக்கும்.

திருநீற்றின் திரவியம் கோமயமாம். அசுத்தமாயும், வியாதியால் பீடிக்கப்படுவதாயும், அங்கவீனமுள்ளதாயும், மலட்டுத்தன்மையுடையதாயுமுள்ள பசுக்களை நீக்கி, நல்ல அழகுள்ள பசுக்களின் சாணத்தை எடுத்து உருட்டியுலர்த்தி, அக்கினியில் தகித்து, வில்வக்கனி அளவுள்ள மட்பாத்திரத்தில் வைத்துக்கொண்டு இசானதி பஞ்சப்பிரம மந்திரம் ஜெபித்து வைத்துக்கொள்ளவும் எனப் போதாயண கல்பசூத்திரங் கூறுகின்றது.

இத்திருநீற்றை எல்லாரும் வணங்கவேண்டுமென்பதே சம்பந்தரது விருப்பம், இதனாலேதான் "துதிக்கப்படுவது நீறு" என்று தமது தேவாரத்தில் கூறினர். இத்துடன் நின்றுவிடவில்லை. தியானிக்கப்படவேண்டியிருப்பதாலும், ஸ்ரீ பஞ்சாட்சரமாகிய மந்திரத்தின் உண்மையின் உடைமையினாலும் 'மந்திரமாவது நீறு' எனவும், இதைத் தியானித்து வணங்கின முத்தி சித்திக்குமாதலால், "முத்தி தருவது நீறு" என்றும் திருநீற்றின் பெருமையையே ஒரு பதிகத்தில் கூறியுள்ளார், திருஞானசம்பந்தர் மட்டுமல்ல. இன்னும் நாவுக்கரசர், திருமூலர், மாணிக்கவாசகர், பட்டினத்தார் முதலிய பல அடியார்களும் திருநீற்றின் மகிமையை உணர்ந்து அதைப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர், திருநாவுக்கரசரே "திருவெண்ணீறணியாத திருவிலூரும்...... அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே" என்றும் "அருநோய்கள் கெடவெண்ணீறணியாராகில......பெயர்த்துஞ் செத்தும் பிறப்பதற்கே தொழிலாகி இருக்கின்றாரே" என்று திருநீறு அணியாமையைக் கண்டித்தருளினர். மாணிக்கவாசக சுவாமிகளும் தமது திருவாசகத்தில் "பூசுவதும் வெண்ணீறு" என்று திருநீற்றின் இன்றியமையாமையை விளக்கியுள்ளார். வேறு ஓரிடத்தில் அப்பெரியார்,

> பிணியெலாம் வரினுமஞ்சேன்
> பிறப்பினோ டிறப்பு மஞ்சேன்
> துணிநிலா வணியி னானைத்
> தொழும்பரோ டழுந்தி யம்மா
> திணிநலம் பிறவுங் காணுஞ்
> சேவடி பரவி வெண்ணீ
> றணிகிலா தவரைக் கண்டா லம்ம
> நாமஞ்சு மாறே

என்று கூறுகின்றார்.

இத்திருநீற்றைத் தரிக்காதவர் ஞானத்தை அடையமாட்டார். ஆனால் அவர்கள் என்றும், சமுசாரமாகிய நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். அவர்கள் செய்த புண்ணியங்கள் யாவும் ஈற்றில் பாவமாய் முடியும்.

> "பகர்புனித நீறணிபவர் ஞான
> மடையார் கோடிபாவமானாலுந்
> தகர்தலுறார் சமுசார மாபாவமு
> டையாராயத் தாழ்வார் தும்பி
> புகரில வருணாச்சிரம பலமுறு
> ரவரியற்றும் புனிதமான
> [illegible]
> [illegible]
> (சூதசங்கிதை)

# கடவுளும் இயற்கையும்

(தெல்லியூர். நடராஜன்)

இயற்கை இறைவனது உண்மை இன்னதென மானிடர்க்குணர்த்தும் காட்சிப்பொருள். இயற்கையை ஆய்ந்தறிந்தால் கடவுளின் உண்மையை உணரலாம், என்றும் நீங்காத இன்பம் நுகரலாம்.

முற்காலத் தமிழ்ப்புலவர்கள்தாம் இயற்றிய நூல்கள் பலவற்றிலும் இயற்கையின் சிறப்பை வர்ணித்திருக்கிறார்கள். தோலாமொழித் தேவர் சூளாமணி யென்னும் நூலில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் முதலிய நிலங்களின் தோற்றங்களையும் அவ்வவற்றின் தெய்வங்களையும் கூறுகின்றார். கம்பர் பலவித ஓசைகளும் ஒன்றிலொன்று சேர்ந்து மயங்குகின்றதெனக் கூறுகின்றார்.

> "ஆறுபாயரவம், மன்னராலயாய்
> அமலை, ஆலைச்
> சாறுபாயோசை, வேலைச்சங்கு
> வாய் பொங்கு மோதை,
> ஏறுபாய் தமரம், நீரில் எருமை
> பாய் துழனி, இன்ன
> மாறுமாறாகித் தம்மின் மயங்குமா
> மருதவேலி"

மருத நிலத்தில் எழுகின்ற ஓசைகள் ஒன்றோடொன்று சேர்ந்து இன்ன இன்ன ஓசையெனக் கூற முடியாவண்ணம் மயக்கத்தை உண்டாக்குகின்றதாகக் காட்டுகின்றார். இன்னோரிடத்தில்,

> "தண்டலை மயில்களாடத் தாமரை
> விளக்கந் தாங்கக்
> கொண்டல்கள் முழவினேங்கக்
> குவளை கண்விழித்து நோக்கத்
> தெண்டிரை எழினி காட்டத் தேம்
> பிழி மகர யாழின்
> வண்டுகளினிது பாட மருதம் வீற்
> றிருக்கு மாதோ!"

என மருதநிலத்தின் சிறப்பை வியந்து புகழ்ந்து உரைக்கின்றார். இவற்றால் இயற்கையாக உண்டாய நிலங்களினது சிறப்பும் அவற்றைப் பற்றி ஆராயப்புகின் அவற்றின் இன்பங்களையும் ஒருங்கே அறியலாகும்.

காலை நேரத்தைப் பல புலவரும் பல்வேறு திறம்படப் புகழ்ந்துரைக்கின்றனர். வில்லிபுத்தூரார் பாரதத்தில் செங்கதிர் வனப்பையும் காலையில் அஃது உதயமாகும் பொழுது நடக்கும் விசேடங்களையும் கூறுகின்றார், புழேந்தியாரும் நள வெண்பாவில் காலை மாலை என்னுமிரண்டையும் பற்றி விசேடமாகக் கூறுகின்றார். வில்லிபுத்தூரார் தண்மதிப் பொலிவை,

> "கானெலாம் மலர்ந்த முல்லை ககன
> மீதெழுந்த தென்ன
> வானெலாம் வயங்குதாரை நிரை
> நிரை மலர்ந்து தோன்ற
> வேனிலான் விழவின் வைத்த
> வெள்ளி வெண் கும்பமென்ன
> தூநிலா மதியம்வந்து குணதிசைத்
> தோன்றிற் றம்மா",

எனக் கூறுகின்றார். இப்பாவை ஆராயும்பொழுது இறைவன் ஆக்கிய இத்தண்மதியின் சிறப்பை யறியலாகும். வயல் வளங்களும் அவற்றின் சிறப்பையும்பற்றி கம்பரும் அதிவீரராம பாண்டியனும் மற்றும் சில நம் கூறிப்போந்தனர்.

> "ஒழுகு தீம்புனல் சிறை செபு
> மோதையும், உழுநர்
> குழுவின் சும்மையும், உழத்தியர்
> குரவையி னார்ப்பும்
> 'கழனிவாழ் கொ'ன வானமுலை
> விதலுணர் கலிப்பும்
> மழைமுழக் கொடுமாறு கொண்
> டொலித்தன மாதோ"

என அதிவீரராம பாண்டியன் நைடதத்தில் கூறுகின்றதை நாம் காணலாகும்.

வயல்வெள்ளத்தொடு அதற்கின்றியமையா நீர்வளத்தையும் ஆராய்வாம். கம்பர் சரயு நதியானது எங்கேயுற்பத்தியாகி என்னென்னத் திறகூடாகப் பாய்ந்து எங்கு செல்கின்றதென மிகவும் நுண்ணிய முறையில் இறைவனுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றார்.

> "கலிலிடைப் பிறந்துபோந்து கட
> லிடைக கலந்த நீத்தம்
> எல்லையில் மறைகளாலும் இயம்
> பரும பொருளீதென்னத்
> தொல்லையில் ஒன்றேயாகித் துறை
> தொறும் பரந்த சூழ்ச்சிப்
> பல்பெருஞ் சமயஞ் சொல்லும
> பொருளும்போற் பரந்த
> தன்றே."

இவ்வண்ணம் ஆற்றின் சிறப்பைக் கூறும் கம்பர் அதனுடன் சோலைக் காட்சிகளையும் கூறுகின்றார்.

> "குயிலினம் வதுவை செய்யக்
> கொம்பிடைக்குனிக்குமஞ்சை
> அயல்விழி மகளிராடும் அரங்கினுக்
> கழகு செய்யப்
> பயில்சிறை யரசவன்னம் பனி
> மலர்ப்பள்ளி நின்றும்
> துயிலெழத் தும்பிகாலைச் செல்லொலி
> முரசு சோலை."

இவ்வாறு பலரும் பலவிதமாகவும் இயற்கையைச் சிறப்பித்துக் கூறியுள்ளனர். அவற்றை ஆராயும் பொழுது அவற்றின்கண்ணேயமையும் இன்பத்தினை எடுத்தியம்ப வல்லார் யார். அவற்றை நுணுகி நுணுகி ஆராயப்புகின் இறுதியில் இறைவன் இன்றி இவையொன்றுமில்லை எனும் முடிபையே நாம் அடையவேண்டும். இயற்கையின்பத்தில் சிறந்த இன்பம் காணப்போமென ஆராயப்புகின் இறைவனின் அற்புதத்தினையும் அழகினையும் காணலாம். இறைவன் மாணபுதரன்றோ!

ஒருவன் காலோறும் திருநீற்றை அன்புடன் அணிந்து வருவானாயின் அவனிடத்துள்ள தீயகுணங்கள் எல்லாம் அற்றுப்போம். இத்திருநீற்றைப் பரவப் பூசும்போது அதுபடிகின்ற மெய்த்துவாரமும் ஒவ்வொரு சிவலிங்கமாகி மலத்தின் வலியைக் கெடுக்கும். திருநீறு பூசுதலினால் வரும் பலனுள்ளனது பயனபடற்கு கடவுட்பக்தி இன்றியமையாதது. திருநீறு உடல்போலவும் சிவபக்தி உயிர்போலவும் உள்ளன. உடலும் உயிரும் ஒன்றுக்கொன்று அவசியமாதல்போல திருநீறும் சிவபக்தியும் ஒன்றுக்கொன்று அத்தியாவசியமாம். திருநீற்றை உத்துளனமாகப் பூசும்பொழுது திருவைந்தெழுத்தைத் திருவாய்மலர்ந்து உச்சரிக்கவேண்டும். நாவுக்கரசரும்,

> கருவாய்க் கிடந்துன் கழலே நினை
> யுங் கருத்துடையேன்
> உருவாய்த் தெரிந்துன்றனுமப் பயி
> ன்றேனுனதருளால்
> திருவாய்ப் பொலியச் சிவாய நம
> என்று நீறணிந்தேன்
> தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூ
> ரானே.

என்று கூறுகின்றார்.

இத்திருநீற்றின் பெருமையை அளவிட்டுரைக்க முடியாது. அறிஞர் பலரும் போற்றிப் புகழ்ந்திருக்கின்றனர்.

இவ்வித பெருமை வாய்ந்த திருநீற்றை நெற்றியில் அணிவதற்கு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ச் சமயம்

(குகதாசர் ச. சபாரத்தின முதலியார் எழுதிய கட்டுரை)

(முற்றொடர்)

இந்தக் காலத்திலே எல்லோருக்கும் திருப்தி கொடுத்தற்குரியவொரு கொள்கையைப் பிரதிபாதித்துவிடுதல் வேண்டுமென்னுமோர் லௌகிக தருமங்காரணமாக, சமயத்தின் பிரயோசனத்தை உற்று நோக்காது, லௌகிகப் பயன் மாத்திரையாகவே எடுத்தாண்டு, எல்லாச் சமயங்களும் இறைவனடியைச் சேர்தற்கு உபாயமாகுமென்றும், ஓர் ஊருக்குச் செல்வதற்குப் பல பாதைகள் இருத்தல்போலக் கடவுளை அடைதற்கும் பல பாதைகள் உளவாயின வென்றும், நமது லௌகிக அறிஞர் பலர், சமயத்தையும் லௌகிகப் பிரயோசனமொன்றே குறித்து எடுத்து விளக்குவர். சடப்பொருளாகிய ஓர் ஊரைச் சென்றடைதலைச் சித்துப்பொருளாகிய கடவுளைச் சென்றடைதற்கோர் உபமானமாக எடுத்துக்காட்டுவது சிறிதும் பொருந்தாது. கடவுளைச் சென்றடைவது அவருடைய உண்மைச் சொரூபத்தை ஐயந்திரிபு விபரீதமறத் தெளிந்துணர்த்தும் மெய்ஞ்ஞானத்தாலன்றிப் பிறிதொன்றாலும் ஆகாது. கடவுள் திரிபொன்றுமில்லாத உண்மைப்பொருள். அந்தப்பொருளின் உண்மைச் சொரூபத்தை அனுபவத்தாற் காணும் காட்சியாகிய மெய்ஞ்ஞானமாத்திரமே அவரைச் சென்றடைதற்குரிய பாதையாகும்.

இனிச் சிலர் அன்பு மாத்திரையாற் கடவுளையடைதல் கூடுமென்றும் எந்தச் சமயத்தில் நின்றும் கடவுளிடத்தன்பு செய்பவர் முத்திக்குரியரென்றும் வாதிப்பர். அன்பு மிக விசேடமானதோர் பேறு என்பதிற்றடையில்லை. ஆனால் அந்த அன்பு மெய்யன்பாதல் வேண்டும். கடவுளுடைய உண்மைச் சொரூபத்தைக் கண்டு அதன்கட் செய்யுமன்பே மெய்யன்பெனப்படும். உண்மைப்பொருளை யிதுவென்றறியாது அதனைத் திரிபுறவுணர்ந்து செய்யும் அன்பு குருட்டுப்பத்தி எனப்படும். இதனால் முத்தி சித்திக்கமாட்டாது. ஆனால் இது உண்மைச் சமயத்தில் ஒருவனை உய்த்தற்குச் சாதனமாகும்.

வேறு சிலர் பிரபஞ்சத்தை வெறுத்துத் துறவுபூண்டொழுகுவோர் எந்தச் சமயத்தில் நின்றாலும் முத்திக்குரியர் என்பர். இவர்கள் பிரபஞ்சத்தை வெறுப்பது எங்ஙனம்? அதனை உள்ளபடி அறிந்தாலன்றோ அதனை வெறுத்தல் கூடும். ஆகவே பிரபஞ்சத்தை உள்ளபடி கண்டு வெறுத்தவர் தாமே முத்திக்குரியர் என்றபடியாகும். பிரபஞ்சத்தை இருந்தபடி உள்ளபடி காட்டவல்லது உண்மைச் சமயமொன்று மாத்திரமேயாகும். இதகைய காட்சியே தத்துவதரிசனம் எனப்படுமென்க.

இக்காலத்துள்ளாருடைய காட்சியின்றதும லௌகிக அந்தகாரத்துள் மறைந்து கிடத்தலால் இவர்கள் முத்தியாவது இம்மையிலேயே ஒரு சுதந்திரமாவது விளங்கமாட்டாது. அதனை இந்த உலகத்துள்ள ஓர் பட்டணம் போல மதிக்கச் சுருதி நூல்களும் எந்தச் சமயத்திலே நின்றாலும் அந்தச் சமயத்தை உள்ளபடி வசித்து அதன்வழி ஒழுகும்வாயின் சிவஞானபூமியாகிய கடவுள் அடிப்பட்டணத்துள் ஒருமைச் செலுத்திவிடுவார் என்று மயங்குவர். இவர்களுடைய கொள்கை அந்தந்தச் சமயங்களால் பிரதிபாதிக்கப்படும் முத்தியாகக் கொள்ளப்படுவதன்றி, பதமுத்திகளுக்கு ஒருவாறு ஏற்புடைத்தாகுமன்றி இந்தப் பதமுத்திகளுக்கும் அப்பாலுள்ள பரமுத்திக்கு ஒருசிறிதும் ஏற்புடைத்தாகாது. அந்தப் பரமுத்தி இந்த உலகத்திலுள்ளதொரு பட்டணம் போல்வதன்று. அது ஒரு இடமென்று சொல்லத்தக்கதன்று. அது இடம் காலம் முதலிய வரைபாடுகளனைத்தையுங் கடந்ததோர் நிலையாகும். அந்நிலை கடவுளையும் பிரபஞ்சத்தையும் உள்ளபடி அறிந்து, அறிந்தபடி அனுபவத்திற்கண்டு பிரபஞ்சத்தில் நீங்கிக் கடவுளுடைய திருவடிக்கீழ் அத்துவித சம்பந்தமுற்று நித்தியானந்தத்தை அனுபவிக்கும் ஓர் நிலையாகும். முத்தியாவது நரகத்தில் நின்று விலகுதலாகிய இரட்சிப்பு மாத்திரையேயென்று மேலைத்தேசச் சமயங்கள் போதிக்கும் போதனையை எமது தேசத்தவர்களும் உண்மையென்று விளங்கிக்கொண்டு ஏமாந்துவிடுகின்றார்கள். முத்தியெனப்படுவது நரகத்தடையினின்று விலகுவதன்று. பாசபந்தத்தினின்று விலகுதலே முத்தியெனப்படும். பாசபந்தத்தின் விலகுவது உண்மைப் பொருளாகிய இறைவனையுள்ளபடி கண்டு, அவரோடு நாம் கொண்டுள்ள அத்துவித சம்பந்தத்தை ஐயந்திரிபற அனுபவத்திற் கண்டாலன்றிக் கூடாது. அத்தகைய காட்சியே ஞானம் எனப்படுவது. இந்த ஞானத்திற்கேது சைவசித்தாந்தத்தின் மாத்திரமே தெளிவுற விளக்கப்பட்டிருக்கின்றது. அதுபற்றியே அந்தச் சித்தாந்தம் பின்வருமாறு எடுத்துக் கூறும்.

> புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
> புகல் மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம
> அகத்துறைகளவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
> அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்துஞ்
> சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதச்
> சிரப்பொருளை மிகத்தெளிந்துஞ் சென்றாற் சைவத்
> திறத்தடைவரிதிற் சரியை கிரியா யோகஞ்
> செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்.

முத்திக்கு ஏதுவாகிய ஞானம் எமது சிற்றறிவுக் கெட்டாததோர் அதாரங்கப் பொருளாகும். அதையடைதற்கேதுவாகிய உபாயங்களைப் பரமபதியாகிய சிவபெருமான் தாமே ஆன்மாக்கள்மீது கொண்ட பெருங்கருணைத் திறத்தால் சரியை கிரியை யோகமென்னும் சோபானங்களாக எமக்கு ஆகமங்களிற் திருவாய்மலர்ந்தருளினர். இச்சோபானங்களை ஆகமங்கள் சொல்லும் வழியில் நின்று நாம் அனுட்டித்தாலன்றி நமக்கு ஞானம் ஒருபோதும் வாய்க்கமாட்டாது. ஆசிரியன் சொல்லிக் காட்டும் வழிகளை மாணாக்கன் காமத்தோடு அனுட்டித்தாலன்றிக் கல்வி கற்றுத் தேறமாட்டான். இக்காலத்துள்ளவர்கள் இந்தக் கடப்பாட்டை அலட்சியஞ் செய்து கடவுள் அருளிய முறைகளைப் பிறழ்த்தியும், அவற்றை ஒருங்கே அநாவசியமென்று புறந்தந்தும் தமது மனஞ் சென்றவாறே ஒழுகுவாராயினர். இங்ஙனம் ஒழுகுதலால் இவர்களுக்கு உறுதிப்பயன் வாய்ப்பது சிறிதும் கூடாதுகடக்கின்றது. இவர்கள் இங்ஙனம் ஒழுகுதலால் [illegible] ஆம் மகத் [illegible] ஆவலுழுவாராயினர். எல்லாக்

கத்தின் பொருட்டாக நமது சமயகுரவரும் மற்றைய இவர்கள் கிரமம் [illegible] பாராயண [illegible] அருகி [illegible] முக்க மாட்டார் [illegible] தண்ணம்,

# விநாயக சதுர்த்தி

திருமயிலை, திருவாளர். சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்

> விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
> விநாயகனே வேட்கை தணிவிப்பான்—விநாயகனே
> விண்ணிற்கு மண்ணிற்கு நாதனுமாந் தன்மையினாற்
> கண்ணிற் பணிமின் கனிந்து.

விநாயக சதுர்த்தியாவது சிவகுமாரர்களுள் மூத்த பிள்ளையாகிய கணபதியைக் குறித்து நோற்கும் விரதங்களுள் ஒன்றாம். இது ஆவணிமாசத்தில் பூர்வபக்ஷ சதுர்த்தியில் அனுட்டிக்கப் படுவது. சைவர் வைணவர்களால் பேதமின்றிக் கொண்டாடப்படுவது. பம்பாய் முதலிய வடதேசப் பகுதிகளில் மிகச் சிறப்பாக அனுசரிக்கப் படுவது.

விநாயகருக்குப் பிள்ளையார், கணபதி, விக்கினேசுரர், மூத்தநாயனார் முதலிய பலபெயர்கள் உண்டு. விநாயகரென்றால் தனக்குமேல் தலைமையில்லாதவர் என்று பொருள். அதாவது தாமே முழுமுதற் கடவுள். இவர் பிரணவ சொரூபியென்பது பின்வரும் பாவால் அறியலாம்.

> பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
> சரணவற் புதமலர் தலைக்கணிவோமே.

யாவர் எக்கருமத்தைத் தொடங்கினாலும், விநாயக வணக்கமின்றிச் செய்யார். கடிதம் முதலியன எழுதத் தொடங்கினால் பிள்ளையார்சுழியின்றி ஆரம்பிப்பதில்லை. பிள்ளையார் சுழி யென்பது பிரணவக்குறியீடாகும். பிள்ளையார் கோயிலில்லாத கிராமமே இல்லையெனலாம். விநாயகரைச் சிவகுமாரரென்று சொல்வது உபசார வழக்காம். பூவும் பூவின் மணமும் போல இவரும் சிவபெருமானும் பிரிக்கப்படாதவர். அதாவது சிவபெருமானும் விநாயகரும் ஒருவரேயாம். சிவபெருமான் கொண்டுள்ள பல மூர்த்தங்களுள் விநாயகமூர்த்தமும் ஒன்றெனப்படலாம். இது கருதியன்றோ மூத்த நாயனார் திருவிரட்டை மணிமாலை, நாரையூர் பொல்லாப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை முதலிய விநாயக பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன.

விநாயக மூர்த்தத்தின் மகிமை கந்தபுராணத்துள் கயமுக னுற்பத்திப் படலம், அனந்தன சாபநீங்கு படலம் முதலியவற்றுட் கூறப்பட்டுளது. இப்படலங்களைத் தழுவியெழுந்த பிள்ளையார் கதையென்னும் வரதராசபண்டிதர் நூலாகும். விநாயகர் பெருமையை விரிவாகக் கூறும் தமிழ் நூல் கச்சியப்ப முனிவரால் செய்யப்பட்ட விநாயக புராணமென்பதும் பார்க்கவ புராணமாம். இது உபாசனா காண்டம் லீலா காண்டமென்னும் இரு பிரிவினையுடையது. இப்புராணம் சொல்வளம் பொருள்வளம் சுந்தரத்தத் கருத்து முதலியன செறிந்து விளங்குவது. உபாசனா காண்டத்தில் விநாயகரை உபாசித்துப் பேறு பெற்றவர்களின் சரித்திரங்கள் கூறப்பட்டுள்ளன. லீலா காண்டத்தில் விநாயகப்பெருமான் தருமமை வழிபடுவோர்களை [illegible] கொண்ட பன்னிரண்டு மூர்த்தங்களையும் அம்மூர்த்தங்கள் மூலமாகப் புரிந்த திருவிளையாடல்களையும் எடுத்தியம்பப்பட்டுள்ள

தைக் காணலாம். இத்தகைய அருமை வாய்ந்த தமிழ்ப் புராணம் இப்போது கிடைப்பதருமை. இதனை மீட்டும் அச்சிட்டு உபகரிக்க வேண்டியது சைவாபிமானிகளின் கடமையாகும். ஆசிரியர் திருவாவடுதுறையைச் சேர்ந்தவராகலின் அவ்வாதீனத்தார் கவனிக்கவேண்டியது முறைமையாகும்.

விநாயகர்மீது பாடப்பட்ட ஏனைய தமிழ் நூல்களுட் சிறப்புடையவை:—

1. விநாயகரகவல்
2. விநாயககவசம் (இது விநாயக புராணத்தைச் சேர்ந்தது)
3. பிள்ளையார் கதை
4. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்
5. மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை
6. திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் திருவிரட்டை மணிமாலை
7. திருவலஞ்சுழி மும்மணிக் கோவை
8. துண்டிவிநாயகர் திருவருட்பா
9. பழனி விநாயகர் பள்ளு
10. கல்லாடையந்தாதி (இவற்றுள் 5, 6, 7 பதினோராந் திருமுறையிற் சேர்ந்தவை)
11. விநாயக மான்மியம் (இது விநாயக புராணத்தைச் சுருக்கமாக ஆசிரியப்பாவாற் கூறுவது. தெளிவான நடையில் யாக்கப்பட்டது)
12. கணேசர் கலிவெண்பா விநாயக புராணச் சரித்தொகுப்பைப் பாராயணத்தின் பொருட்டு 115 அடிகளிற் றொகுப்பது.

விநாயகருக்குரிய முக்கிய தலங்களாவன:— திருவலஞ்சுழி, திருச்செங்காட்டங்குடி முதலியன. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரும் திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப்பிள்ளையாரும் முறையே நம்பி யாண்டார் நம்பிகளுக்கும் மெய்கண்ட தேவருக்கும் அருள் புரிந்து தேவார திருமுறைகளையும் தமிழ்ச் சிவஞான போதத்தையும் தமிழ்நாட்டிற் குதவியமை போற்றத்தக்கதாம்.

# திருநீற்றின் பெருமை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சில மக்கள் கூசுகின்றனரே. என்ன பேதமை இது. இதை அணிவதால் தங்கள் மதிப்பு குறைந்து விடுமென்றெண்ணுகின்றனரோ அலது தங்கள் அழகு அற்று விடும் என்று ஏங்குகின்றனரோ? சீ வெட்கம்! வெட்கம்!! ஒருவன் கடும்நோயால் பீடிக்கப்பட்டு வருந்திக்கொண்டிருக்கும் பொழுது திருநீற்றை அன்புடன் அணிவானாயின் அவனுடைய நோய் சிறிது குணமடையும். ஆகவே இது நோய்க்கு மருந்தாகின்றது. ஒருவனுடைய துயரத்தைத் தீர்க்கும் தன்மையும் அத்திருநீற்றுக்கு இருப்பதனாலே "வெந்துயர் தீர்ப்பது நீறு" என்று கூறியிருக்கின்றனர்.

ஆகவே, சைவமக்களாயுள்ளாரெல்லாரும் மெய்யன்போடு திருநீற்றை அனவரதமும் அணிந்து அருட்கடலாம் ஆண்டவனது பாதகமலங்களை அன்புடன் சேவித்து வருவாராயின் சாற்றில அவர்களுக்கு முத்தி சித்திக்கும்.

> கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
> மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகிற்
> றங்கா வினைகளுஞ் சாரும் சிவகதி
> சிங்காரமான சிவகதி சேர்வரே.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வில்லிபுத்தூராரும் மகாபாரதமும்

[திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்கள்]

மகாபாரதம் வடமொழியிலே வியாச முனிவரால் செய்யப்பட்டது. அதனைத் தமிழிலே மொழிபெயர்த்தவர்கள் பெருந்தேவனார், வில்லிபுத்தூராழ்வார், நல்லாப்பிள்ளை, அம்பலத்தாடுமையர், அஷ்டாவதானம் அரங்கநாதக் கவிராயர் என்போர். இவர்களுள் மிகச்சிறந்த நூலை இயற்றியவர் வில்லிபுத்தூரார் என யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். வில்லிபாரதம் சொற்சுவை, பொருட்சுவையென்றின்ன பிற ஒருங்கமையப் பெற்றது.

வில்லிபுத்தூரார் ஒரு வைஷ்ணவப் பிராமணர். கோயம்புத்தூரிலே சனியூர் என்ற இடத்தைச் சேர்ந்தவர். தமிழிலே திருப்புகழ் பாடிய அருணகிரிநாதரும் இவரும் ஒரே காலத்தவர். அக்காலத்திலே புலவர்கள் பலவகைச் சந்த விருத்தங்கள் பாடுதலில் ஈடுபட்டனர். இவருடைய நூலிலே பலவகையான சந்த விருத்தங்களைக் காணலாம். திருப்புகழ்ச் சந்தத்தை யொட்டியன பல இவர் பாரதத்திலும் காணலாம்.

அருணகிரிநாதர் பாடிய கந்தரந்தாதி என்னும் நூலுக்கும் உரை செய்தவர் இந்த வில்லிபுத்தூராரேயாகும். இந்த அந்தாதி முழுவதும் யமகம். அதாவது, ஒவ்வொரு செய்யுளிலும் நாலு அடிகளும் ஒரே மூலக் கொண்டதாக வருவதாகும். இந்தக் கந்தரந்தாதியின் 54ம் கவியாகிய 'திதத்தத்' என்று தொடங்கும் செய்யுளுக்கு உரை சொல்லும்போது திகைத்தாராம். இந்த வில்லிபுத்தூரார் தம்மோடு உரையாடித் தோற்கும் புலவர்களது காதுகளை வெட்டுவது வழக்கமாம். என ஒரு கதை உண்டு. வில்லிபுத்தூராரும் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, தனது செவியினை வெட்டும்படி அருணகிரியிடம் தான் வைத்திருந்த அங்குசத்தைக் கொடுத்தாராம். 'குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனில்லை.... குறும்பியளவாக் காதைக் குடைந்து தோண்டி எட்டினமட்டறுப்பதற்கோ வில்லியில்லை' என்னுஞ் செய்யுளால் இது அறியலாகும். இவ்வாறு உண்மையில்லை, புலமைத்திருக்குக்காண்ட வில்லிபுத்தூராரது புகழ் நாடெங்கும் பரவியது.

அக்காலத்து, கொங்குநாட்டையாண்டான வரபதியாட்கொண்டான் என்னும் சிற்றரசன். அவன் இப்புலவரது, கல்வியறிவையும், புலமையையும் கேள்வியுற்று வரவழைத்து தமது சமஸ்தானத்துத் தலைமை வித்துவானாக்கினான். அக்காலத்தில அவ்வரசன் வியாசபாரதத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி வேண்டினன். புலவராய வில்லியும் அக்கால வழக்கிற்கேற்ப விருத்தப்பாக்களால் பாடினார் என்பர். இவராலும் வில்லிபாரதத்திலே, அவர் மகனார் வரந்தருவார் என்பாரியற்றிய பாயிரச் செய்யுள்களால் அறியப்படும்.

தமிழநாட்டிலே, கிருஷ்ணனை—கண்ணனை—தெய்வமாகக் கொண்டாடிய நூல்கள் பாரதம், இராமாயணம், பாகவதம் என்பன. இந்நூல்களை விஷ்ணுபக்தியுடையவர்கள் பெரிதும் போற்றி மதிக்கின்றார்கள். சைவனையே முழுமுதற்கடவுளாகக் கொண்டாடுகின்ற சைவர்களும் கண்ணனாலும் மிகுந்த பிரேமையுடையவர்களாகக் காணப்படுகிறார்கள். சமயவாதிகளுட் சிலர் குழந்தை முருகனைப் பக்தி பண்ணுகிறார்கள். ஆகனம் கண்ணனையும் பக்திசெலுத்துகிறார்கள். கிருஷ்ண பரமாத்மா, அருச்சுனனுக்கு ஹிதோபதேசஞ் செய்த பகுதியாகிய 'கீதோபதேசத்தை' யுடைத்தப் பாரதத்தில் மிளிர்தல் கண்டு மகிழத்தக்கது. இத்தகைய நூலிலே, சிவபெருமானைப்பற்றியும் சில இடங்களிற் குறிப்பிடப்பட்டிருப்பது காணலாகும். வில்லிபுத்தூரார், விஷ்ணு பக்தராயினும், சிவனைக் குறிக்குமிடங்களில் சிவனார்க்கு ஏற்றங் கொடுத்து, உண்மைச் சைவர்போலவே காட்சியளிக்கின்றார். இதனால் வில்லிபுத்தூரார், "கடவுளை எப்பெயர் கொண்டு அழைக்கினும், அவர் ஒருவரேயாருவர்" என்ற கொள்கையுடையாரும், மதத் துவேஷமில்லாதவராயும் பரந்த நோக்குடையாராயும், சமயப் பொறையுடையாராயும் காணப்படுகின்றார்.

கம்பர் தமது இராமாயணத்திலே தம்மைப் போஷித்துவந்த சடையப்ப வள்ளலின் பெயரை ஆங்காங்கு பெய்து பாடியதுபோல, நமது வில்லிபுத்தூராரும் தம்மை ஆதரித்த கொங்குநாட்டரசரான வரபதி ஆட்கொண்டானின் பெயரையும் இடையிடையே நுழைத்துப் பாடியிருக்கிறார் பாரதத்தில.

"காவல்சூழ் பெண்ணைநாடன் கொங்கர்கோன் பாவைவேந்தன்
பாவலர் மானங்காத்தான் பங்கயச் செங்கையென்ன
மேவலரொன்னாருமல வெங்களந்தன்னினின்ற
காவலன் கன்னனைக்கைம் பொழிந்தது கனகமாரி"

என்ற பாட்டில் கொங்கர்கோன் என முதலடியில் வந்ததைக் காண்க. இன்ன பிறவற்றால் வில்லிபுத்தூரார் இராமாயணம் முதலிய நூல்களைப் பின்பற்றிப் பாடினரெனச் சொல்லுவார்கள். எவ்வாறாயினும் இவர் பாடிய பாரதமே வேலையோரால் பாடப்பட்டவற்றினுஞ் சிறந்து தமிழ்மக்களிடையே நன்கு பரவியதாகும்.

இந்தப் பாரதக் கதையினை எல்லாவீட்டுப் பாட்டிமாரும் அறிவார்கள், சொல்லுவார்கள். நாமும் கேட்டிருக்கிறோம்.—துஷ்யந்தனுக்குச் சகுந்தலைபிடத்துப் பிறந்த புதல்வனின் பெயர் பரதன். அவன் இந்தியாவை அரசாண்டான். அந்தப் பரதனுக்குப்பிறகு இந்தியாவைப் "பாரதநாடு" என வழங்கி வருகின்றோம். இந்தப் பாரதநாட்டில் மிகப் பெரிய யுத்தம் ஒன்று நடந்ததாம். அந்த வரலாற்றை வியாசமுனிவர் 'மகாபாரதம்' என்ற பெயரோடு எழுதிவைத்தார். அதனை மொழிபெயர்த்துத் தமிழிலே செய்தவர் இந்த வில்லிபுத்தூரார்.

தற்காலத்திலே, சில அறிஞர்களும் இப்பாரதத்தினைக் கட்டுக்கதையெனச் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த மகாபாரத யுத்தத்தைப்பற்றிச் சங்க நூல்களிலுங் காணகிறோம். உண்மையை உள்ளவாறே சொல்லிப் போவார்கள் சங்கப்புலவர்கள். இது எவருமறிந்தது. தமிழிலே எட்டுத் தொகையுள் ஒன்றாகிய புறநானூற்றிலே இரண்டாஞ்செய்யுளிலே "ஈரைம்பதின்மரும் பொருதுகளத்தொழிய, பெருஞ் சோற்றுமிகுபதம் வரையாது கொடுத்தோய்" என்ற அடிகளிலே, பாரதப்போரினைக் காண்கிறோம். இந்தப் புறநானூற்றுக்கெழுதப்பட்ட உரையும் மிகமிகப் பழையதோர் உரை. அந்த இரண்டடிகளுக்குமுள்ள உரைப்பகுதியில ஆனமும் தெளிவாகக் காண...

தொடர்ச்சி 6-ம் பக்கம்

30-9-44 சனிக்கிழமை இரவு 8 மணி.

யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில்
வடமாகாணத்தலைவர் திரு. C. குமாரசுவாமி (C.C.S.)
அவர்கள் தலைமையில்

* "இளவரசன் கருணாகரன்" *

(சேக்ஸ்பியரின் "ஹம்லெற்" நாடகத்தைத் தழுவியது)
என்னும் நாடகம்

இணுவில், ஸ்ரீ அம்பிகைபாகர் சைவப்பிரகாச
வித்தியாசாலை ஆதரவில் நடைபெறும்

டிக்கற்விபரம்: ரூபா, 4, 3, 2, 1.
(15 வயதுக்குட்பட்டவர்களுக்கு சதம் 50.)

கீழ்க்கண்ட இடங்களில் டிக்கற் பெற்றுக் கொள்ளலாம்

1 Colombo Restaurant, செம்மாதெரு, யாழ்ப்பாணம்,
2 Gurunathan & Co. சிவன்கோவிலடி, ,,
3 Hindu Organ Office, வண்ணார்பண்ணை,
4 Ambikaipakar Vidyasalai, இணுவில்.

Mis 125 25.9.44

## டாலின் துறைமுகம் ரஷ்யர் வசமாயிற்று

மாஸ்கோ, செப் 22—
பால்டிக் பிரதேசத்தில் முக்கியமான துறைமுகமும் எஸ்தோனியாவின் தலைநகரமுமாகிய டாலின் கடற்படைத் தளத்தை மார்ஷல் கோவ்ரோவின் லெனின்கிராட் முனையை ரஷ்யப்படைகள் பிடித்துவிட்டன.

என்று இன்று வெளியான ஸ்டாலின் அறிக்கை கூறுகிறது. இத்துடன் அவைகள் 100 இடங்களையும் பிடித்திருக்கின்றன என்றும், இதில் முக்கியமானவை டாபா என்ற ரயில்வே ஜங்ஷனும் வேறு இரு நகரங்களும் உள என்றும் மேலும் அவ்வறிக்கை கூறுகிறது.

இன்று வெளியான சோவியத் அறிக்கை கூறுவதாவது:—

வலகாவிற்கு வடமேற்கிலும் மேற்கிலும் சோவியத் துருப்புகள் 60 இடங்களைப் பிடித்திருக்கின்றன.

ஸானக்குக்குத் தென் கிழக்கில் ரஷ்யர்கள் 30 இடங்களை சுவீகரித்துக்கொண்டிருக்கின்றனர்.

மேற்கு ருமேனியாவில் சோவியத் துருப்புகளும் ருமேனியத் துருப்புகளும் சேர்ந்து எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பெரிய ரெயில்வே மத்திய ஸ்தலமாகிய ஆராட் நகரம் நம் கைவசமாகிவிட்டது. இத்துடன் வேறு 50 இடங்களும் ரஷ்யர் வசமாயின. டாலின் துறைமுகத்திலிருந்த ஜெர்மன் கப்பல்கள் ரஷ்ய விமானங்களால் தகர்க்கப்பட்டன. அநேக ஜெர்மன் கப்பல்கள் சேதமாயின.

ஆராட் முக்கியமான ரெயில்வே ஸ்தலமாகும். இதைப்பிடித்துவிட்டதால் செஞ்சேனைகள் ஹங்கேரி எல்லைப்புறத்திலிருந்து 15 மைல் தூரத்துக்குள் வந்துவிட்டன எனத் தெரிகிறது. இவ்விடம் ஸெகெடினிலிருந்து 60 மைல் கிழக்கேயிருக்கிறது. ஸெகெடின்தான் மத்திய ஐரோப்பாவில் ஜெர்மன் துருப்பு போக்குவரத்துக்கு முக்கிய இடம். இது ரஷ்ய விமானங்களால் தாக்கப்பட்டது.

### ஹங்கேரி எல்லையை அடைந்துவிட்டனர்

ரஷ்யர்கள் ஹங்கேரி எல்லைப்புறத்தை அடைந்து விட்டனர். ஆனால் எல்லைப்புற ஹங்கேரி ... துருப்புகளுடன் சண்டையிட்டுக்கொண்டிருக்கின்றனர் என்று மாஸ்கோவிலிருக்கும் ராய்டர் விசேஷ நிருபர் அறிவிக்கிறார்.

ஜெர்மானியர்கள் வடக்கு எஸ்தோனியாவிலிருந்து காலிசெய்து வெளியேறுகின்றனர் என்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனத்தின் இராணுவ விமர்சகராகிய கர்னல் ஆலப்ரொப்வான் ஓல்பெர்க் கூறுகிறார்.

## இத்தாலிக்கு ஐக்கியதேச நாடுகள் நிவாரண உதவி

மான்ட்ரீல், செப் 23
ஐக்கிய தேசநாடுகள் நிவாரண உதவித் திட்டத்தைச் சேர்ந்த 'கொள்கைக் கமிட்டி' இத்தாலிக்கு உதவி அனுப்புவதை ஒப்புக்கொண்டு விட்டது. இதற்கான செலவு ஐந்து கோடி டாலர்க்குள்ளாகும்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. வைத்திய உதவியும், சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும். இவ்விதம் இத்தாலிக்கு உதவியளிப்பதை வேறு சத்துரு நாடுகளுக்கும் இதேவித உதவியளிக்க ஒரு மேற்கோளாக எடுத்துக் கூறக்கூடாது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

## 29 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன

யு. எஸ். கடற்படை இலாகா பின்வருமாறு தெரிவிக்கிறது:—
பசிபிக்கில் மற்றும் 29 ஜப்பானியக்கப்பல்கள் அமெரிக்க சப்மரீன்களால் மூழ்கடிக்கப்பட்டன. இவ்வளவு ஏராளமாக எதிரிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. மூழ்கிய போன கப்பல்களில் 8 யுத்தக்கப்பல்களும் இருக்கின்றன. போர் ஆரம்ப சம்பவத்திற்குப்பிறகு இதுவரை 761 ஜப்பானியக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன. அழிக்கப்பட்ட கப்பல்களுள் 2 நாசகாரிகளும் 11 நடுத்தர கப்பல்களும் 9 சிறிய சாமான கப்பல்களுமிருக்கின்றன.

## பெயர் மாற்றம்

வேலணை மண்கும்பான் இராமநாதர் தேவதாசனாகிய நான் 1944-ம் ஆண்டு செப்டம்பர் மீ 24-ந் தேதியாகிய இன்று தொடக்கம் எனது பெயரை இராமநாதர் தேவராசா என மாற்றி வைத்துக்கொண்டேனென்றும் இனிமேல் எவ்வகையான உறுதி சாதனங்கட்கும் மற்றும் எந்தக் கருமங்கட்கும் இ. தேவராசா எனவே கையொப்பமிடுவேனென்றும் இதனாற் சகலருக்கும் தெரிவிக்கிறேன்.

மண்கும்பான் இங்ஙனம்
23—9—44 இ. தேவராசா

Mis 124 25&28.9.44

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வில்லிபுத்தூரரும் மகாபாரதமும்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

லாம். அதாவது, "துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தின்கட் படுந்துணையும் பெருஞ்சோறாகிய மிக்க உணவை இருபடைக்கும் வரையாது வழங்கினோய்" என்பதாகும். இன்னும் இந்தப் பாரதக்கதை கலித்தொகையிலும் சிலவிடங்களிற் காணப்படுகின்றது. வில்லிபாரதத்திலே அந்தப் பழைய உண்மைக் கதையினை உள்ளுறுத்துச் சில புனையப்பட்டனவாகலாம். இந்தப் பாரதத்திலே பல கிளைக்கதைகளுமுண்டு.

குரு என்ற ஓர் அரசனுடைய சந்ததியிலே திருதராட்டிரன் பாண்டு என்னுமிரு சகோதரர்கள் இருந்தார்கள். திருதராட்டிரனுக்குத் துரியோதனன் முதலாக நூறு புதல்வர்களுளர்; பாண்டுவுக்கு தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவர் உளர். இந்தஐவரையும் பஞ்சபாண்டவர்களென அழைப்பர். இவர்கள் பாண்டு இறந்தபின் தாயான குந்திதேவியுடன் இந்திரப்பிரஸ்தம் என்ற நகரில் வாழ்ந்து வந்தனர். துரியோதனன் முதலியோர் அஸ்தினாபுரியிலிருந்து அரசியல் நடாத்தினர். அந்நாளில் பாண்டவர்கள் இராஜசூயம் என்ற பெரிய யாகத்தைச் செய்தார்கள். துரியோதனன் முதலியோர் இந்திரப்பிரஸ்தத்துக்குச் சென்று பாண்டவரின் சிறப்பைக்கண்டு பொறாமையுற்றனர். பாண்டவர்களும் துரியோதனன் முதலியோரும் இயல்பிலேயே ஒத்த மனமுடையவர்களல்லர். இவர்களுக்குள்ள மனவேற்றுமைதான் ஈற்றில் மகாபாரதப் போராக முடிந்தது.

துரியோதனனுக்குச் சகுனியென்றொரு மாமன்; மிக்க வஞ்சக நெஞ்சுள்ளவன். இவன் ஏவுதலால், துரியோதனன் பாண்டவர்களைத் தனது அரண்மனைக்கழைத்து தருமருடன் சூதாடினான். நாடு நகர் யாவற்றையு மிழக்கச் செய்தான். காட்டிலே வசிக்குமாறு அனுப்பிவிட்டான். அல்லாமலும் பாண்டவர்களின் ஒரே பத்தினியாகிய திரௌபதியை அரசசபையில் வைத்து அவளது துகிலையுரிந்து மானபங்கஞ் செய்தான். பாண்டவர்கள் தமது வாக்கைநிறைவேற்றுமாறு பன்னிரண்டு வருடம் வனவாசம் செய்தும் ஒருவருடம் அஞ்ஞாதவாசம் செய்தும் திரும்பவந்து துரியோதனனிடம், தமது நாட்டைத் தருமபடி கேட்டனர். அவன் தரமறுத்ததால் பாரதப்போர் மூண்டது. இற்றில் துரியோதனன் முதலியோர் மாண்டனர். பாண்டவர்கள் வெற்றிகொண்டார்கள். அவர்கள் வெற்றிக்கு கிருஷ்ணபரமாத்மா உதவிசெய்தார். இது தான் பாரதக்கதையின் சுருக்கம்.

பாரதக்கதையோ, மிகமிக நீளமானது; கிளைக் கதைகளும் மிகமிகப்பல. ஆககாரணத்தினாலே தான், ஒருவர் ஒரு பொருளைப்பற்றி மிக நீளமாய்ப் பேசினால், அல்லது மிக நீளமாக எழுதினால் 'என்ன பாரதம் படிக்கிறீரா?' அல்லது, 'பாரதம் எழுதுகிறீரோ' எனக் கேட்பது வழக்கமாயிற்று. இந்த நீளமான பாரதக் கதையின் மிகச் சுருங்கிய சுருக்கமேதான் முன்னர்ச் சொல்லப்பட்டதாகும்.

இனி, எங்கள் வில்லிபுத்தூரர் பாரதம் காவியச்சுவை ததும்ப உலகநீதியும், பண்டைய நாகரிகமும் விளங்கும் தெரிக்குமாறு, சிறந்ததால். இந்நூலிலே, மிகச் சுவையான பகுதிகள் கிருஷ்ணன் தூது, சருக்கம், பதின்மூன்றாம், பதினெட்டாம் போர்ச் சருக்கங்கள். இவர் சந்தச் செய்யுள் பாடுதலில் மிகச் சிறந்தவர். போர்பற்றிய செய்யுட்கள் மிக ஓசையுடையனவாகக் காணப்படுகின்றன. இவருடைய சந்த இன்பத்தைப் பின்வரும் செய்யுளில் காண்போம்.

கிருஷ்ணபிரான் துரியோதனனிடத்துப் பாண்டவர் தூதனாகச் செல்கிறான். கிருஷ்ணனுடைய தூதினைத் துரியோதனன் முதலியோர் விரும்பாது, அவரைக்கொல்ல முயற்சி செய்தார்கள். வாய்க்கவில்லை. அப்பொழுது கண்ணன் விசுவரூபங்கொண்டெழுந்தார். அது குறித்து, வில்லிபுத்தூரர் எழுச்சியோடு கூடிய நல்ல சந்தத்தில் தொடர்ந்து பல செய்யுள்கள் பாடினார். அவற்றுள் வகதவையே இவை:—

"இறைவ னெழிறகதர் மணிகளழுத்திய தவிசினி லிருததலுமே
செறு செறனைக செறிந்திறவைவிற் புக செடியவனைப் பொழுதே
மறலியெனத்தகு திருப ஸியறறிய விரகை மனதமுணர
முறுகு சினத்துட னடியதலத்துற முடிககனத் துறவே"

இந்தச் செய்யுளில் கண்ணன் படுகுழியில் வீழ்த்தப்படும்போது, நிகழ (செறு செறன என்ற) மொழிக் குறிப்பும் பிறவு மமைந்திருத்தல் கண்டு இன்புறத்தக்கதாகும்.

பாரதத்துள் வருகின்ற முக்கியமான சில பாத்திரங்களின் இயல்புகளைக் கவனிப்போம்.

பஞ்சபாண்டவருள் தருமர் மிகவும்பொறுமையுடையவர். துரியோதனனோடு சூதாடி எல்லாவற்றையுந் தோற்றுநின்றார்தருமர். அந்த நேரத்தில், அவர்கள் முன்னிலையில அவர்கள் பத்தினியான திரௌபதியின துகிலையுரிவித்தான. "கற்றைக்குழலைப்பிடித்துக் கண்ணிளான் பெற்றெடுத்தான, பற்றித் துகிலுரியப் பாண்டவரும் பார்த்திருந்தார், கொற்றத் தனித்திகிரிக் கோவிந்தா நீயன்றி, யற்றைக்கு மென மானம ஆர்வேறு காத்தாரோ? என்று கண்ணனையே தியானித் தாள், கண்ணன்தான் அன்றைக்குக் காத்தார். அப்பொழுது, வீமன் முதலியோர் தங்கள் தங்கள் ஆயுதங்களைப் பார்த்து வெகுண்டெழுந்தும் தருமர் கையமைத்தார். தம்பியரே என செய்தவா! தமையனான் தருமரின் ஆணைக்கு அமைந்தார்கள். தன் மனைவியாருக்கு நேர்ந்த மானபங்கத்தைப் பார்த்து நின்ற பொழுதும், பொறுமையினைக் கைவிடாத தருமர் 12 வருடம் வனவாசம் முடித்து 1 வருடம் அஞ்ஞாதவாசம் முடித்து நாடு, நகர் தருமாறு கேட்டார். அவன் மறுத்தான். இந்த நிலைமையிலும் தருமர், "அறமும் பாகவில்லையில்லை" "ஒருகுலத்தில் பிறந்தார்களுடன் வாழும் வாழ்வினைப் போல் உறுதியுண்டோ ஆருயருக்கும் வலசயனமிற இநு ஸைவ கிராண மாக வெதுப்ப லெனளுன்."

## பொதுஜனப் பாதுகாப்புப்பகுதி

### கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்

வருடாந்தக் கையிருப்பைக் கணக்கெடுப்பதற்காக எல்லாக் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனங்களும் (கொழும்பிலும் வெளியூர்களிலும்) 1944ம் ஆண்டு அக்டோபர்மாதம் 1ம் திகதிமுதல் 4ம் திகதிவரை (இருதினங்களும் உட்பட) மூடப்படும்.

இத்தினங்களில் கூட்டுறவு ஸ்டோர்களுக்குப் மற்றவர்களுக்கும் சாமான்கள் கொடுக்கப்படமாட்டா.

சி. ரகுநாதன்,
ஸீனியர் உதவி ரிஜிஸ்திரார்,
கூட்டுறவுச் சங்கங்கள்

கொழும்பு, 1—9—44.

G 68 18&21&25&28.9.44.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

( † இசைத்தட்டு )

### செவ்வாய் செப் 26

காலை: 7-45 சீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 டாக்கி இசை 8 15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே வி பக்கிரிசாமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 ஆழியூர் என் குஞ்சுமணி புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 ஆழியூர் என் குஞ்சுமணி புல்லாங்குழல் 5-40 இசைப்பயிற்சி 6 கே வி பக்கிரிசாமி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7.15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 தீராததாகம் 8 மதாரசிலுள்ளபடி டி ப்ருந்தா டி முகாந்தா பாட்டு டி அபிராமசுந்தரி வயலின் ஏ கண்ணன் மிருதங்கம் 9 கர்நாடக ராகங்கள் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஆங்கில நாடகம் 10 இசைவேளை† 10-30 முடிவு.

### புதன் செப் 27

காலை: 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி பஞ்சாபகேசன் வயலின் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எ விநாயக முதலியார் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 ஏ விநாயக முதலியார் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 டி ஆர் மஹாலிங்கம் இசைத்தட்டு 6 15 இலக்கியவாசகம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இவைபோதும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால் பெட்டி 7-45 நமது தபால் பெட்டி 8 நவராத்ரி மகிமை 9 டி பஞ்சகோபன் வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஜீ ஐ ஆங்கிலம் 10 ஐரோப்பியசங்கீதம் † 10-30முடிவு.

### வியாழன் செப் 28

காலை: 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திரைஇசை 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 வி என் கிருஷ்ணமூர்த்தி வீணை 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எஸ் கமலாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5: வி என் கிருஷ்ண மூர்த்தி வீணை 5-40 இசைப்பயிற்சி 6 என் கமலாம்பாள் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள்6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கே வி கேசவபாகவதர் பாட்டு 9 கடைசிக்கல் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 மனித ஆராச்சி 10 இசைவேளை 10-30 முடிவு.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சங்கானை மேற்கு (1) சீனிவாசகம் வயித்திலிங்கமும் (2) வயித்திலிங்கம் பெண் செல்லம்மாவும் வழக்காளி.

எதிராக

சங்கானை மேற்கு காலஞ்சென்ற தம்பர் பெருமாளின் கோட்டால் நியமிக்கப்பட்ட தத்துவகாறி பெ. ஆறுமுகம் கைம்பெண் மீனாட்சி

எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திரிக் கோட்டின் 1329ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1944ம் வருஷம் ஐப்பசி மாசம் 14ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் $5\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்.

சங்கானை மேற்கு இறை பாலைக் கலட்டிநிலைப்பரப்பு நாலும் வீடும் கிணறும் செய்பயிர்களும் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஆறுமுகம் கைம்பெண் பொன்னுச்சிக்குரிய ஆதனம், வடக்கு வயிரமுத்து பெண் வள்ளியம்மைக்குரிய ஆதனம், மேற்கு தம்பர் சின்னையாவுக்கும் பெண் ஞானப்பின்னைக்குமுரிய ஆதனங்கள், தெற்கு கை ஒழுங்கை. இதில் மேற்கு எல்லைக் காணிக்குரிய கிணற்றில் பங்கு பிறநீங்கலாக மிகுதி அடங்கலும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்,
கொம்மிஷனர்.

13.9.44.

Mis 122 25 & 28.9 44

## அறிவித்தல்

### யாழ்ப்பாண டிஸ்திறிக் பகுதியில் உப உணவுப்பொருட்கள் கொடுத்தல்

1944ம்ஆ. செப்டெம்பர்மீ 25ந் திகதி திங்கட்கிழமை முதல் 1ந் திகதி வரைக்கும் ஐக்கிய சங்கக் கடைகளல்லாத மற்றைய சில்லறை வியாபாரிகள் மூலம் அச்சில்லறை வியாபாரிகளிடம் பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு கூப்பன்காரருக்கும் பின்வரும் உப உணவுப் பொருட்களை விற்கும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

1 கடலைப்பருப்பு 2 அவுன்ஸ்
2 மஞ்சள் கால் அவுன்ஸ்

(2) தங்களுக்குச்சேரவேண்டிய உப உணவுப்பொருட்களைக் கட்டுப்பாட்டு உணவுப்பொருட்களுடன் பெற்றுக் கொள்ளலாமென இத்தாலறிவிக்கப்படுகின்றது.

E. B. திசவீரசிங்கம்,
வடமாகாண ஏஜண்டருக்காக,
யாழ்ப்பாணம் கச்சேரி, 21—9—44.

G 73 25—9—44

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு க. செ. த. செ. செல்லையாபிள்ளை கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

| நம். | ஞூ. | மீ. | தி. | ரூ. | ஊர். | பெயர். | நகைவிபரம். |
|---|---|---|---|---|---|---|---|
| 114 | 1942 | ஏப்ரல் | 21 | 5 | தின்னவேலி | கோணாமலை நாகையா | பொன் தாலி 1 |
| 509 | ,, | சூன் | 5 | 5 | நாவலர் பளளிக்கூடத்தடி | பக்கிரிசாமி ராமமூர்த்தி | இமிடெ கல் மூடுகட்டு தொங்கட்டான் சோடி 1 |
| 1238 | ,, | ஆகஸ்ட் | 4 | 90 | பெரியகடை சிவன்கோவிலடி | வயித்திலிங்கம் ஆனந்தராசா | கல் இல்லாத பென்டனுடன் குண்டுச்சங்கிலி 1 |

விற்பனவு தாரணவருஷம் புரட்டாதிமாசம் 22ந்திகதி (7-10-44) சனிக்கிழமை காலை 10 மணிக்கு எடுபட்டநகை பிறநீங்கலாக மிகுதி மேற்படி கடையில பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை,
வெந்தீஸ் மேஸ்தர்.

Mis 120 21 & 25-9-44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 25, September 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org